[Organisation | Date]

Tamil | தமிழ்

# பாதுகாப்பு விசா

சுருக்கமான விளக்கம்



**Protection visas** குறித்த கருத்தை மாற்றவும்

Australian Government





# அறிமுகம்

**ஒரு பாதுகாப்பு விசா (Protection visa) (துணை வகுப்பு 866) என்பது தமது சொந்த நாட்டில் குறிப்பிடத்தக்க தீங்கு அல்லது துன்புறுத்தலின் உண்மையான ஆபத்தை எதிர்கொள்ளும் உண்மையான புகலிடக் கோரிக்கையாளர்களுக்கானது.**

Protection visas மற்றும் திட்டத்தைத் தவறாகப் பயன்படுத்த முயற்சிப்பதால் ஏற்படும் விளைவுகள் குறித்தும் மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்த ஆஸ்திரேலிய அரசாங்கம் ஒரு பிரச்சாரத்தைத் தொடங்கியுள்ளது.

ஆஸ்திரேலியா மற்றும் வெளிநாடுகளில் வசிக்கும் இந்தியர்கள் மத்தியிலும் சமூகங்கள் முழுவதும் பரவி வரும் Protection visas பற்றிய தவறான தகவல்கள் அதிகரித்து வருகின்றன.

இந்தத் தவறான தகவல்கள் Protection visa விண்ணப்பதாரர்களுக்கும் அவர்களது குடும்பங்களுக்கும் கடுமையான விளைவுகளை ஏற்படுத்தலாம்.

தவறான தகவல் பரவுவதைத் தடுக்கவும், சமூகங்கள் தங்களுக்குத் தேவையான ஆலோசனைகளைப் பெறுவதை உறுதிப்படுத்தவும், தேவையான தகவல்களையும் கருவிகளையும் வழங்குவதை இந்தப் பிரச்சாரம் நோக்கமாகக் கொண்டுள்ளது.

தவறான தகவலை எதிர்கொள்ள, Protection visa இற்கு விண்ணப்பிப்பது பற்றி எண்ணும் எவருக்கும் சிறப்பு அகதிகள் மற்றும் குடிவரவு சட்ட வழங்குநர்களிடமிருந்து இலவச சட்ட ஆலோசனைகளை உள்நாட்டு அலுவல்கள் திணைக்களம் வழங்குகிறது.

Protection visa இற்குத் தகுதியுடையவர்களா என்பதைக் கண்டறியவும், தவறான ஆலோசனைகளை வழங்கக்கூடிய பதிவுசெய்யப்படாத குடிவரவு முகவரைப் பயன்படுத்துவதால் ஏற்படும் அபாயங்களைக் குறைக்கவும் இந்த ஆலோசனையானது உதவும்.

# Protection visas குறித்த தவறான தகவல்கள்

**தாயகம் திரும்பினால் கணிசமான தீங்கு விளைவிக்கும் உண்மையான ஆபத்தை எதிர்கொள்ளும் அல்லது இனம், மதம், தேசியம், ஒரு குறிப்பிட்ட சமூகக் குழுவின் உறுப்பினர் அல்லது அல்லது அரசியல் கருத்து ஆகியவற்றின் அடிப்படையில் துன்புறுத்தப்படுவார்கள் என்ற நன்கு நிறுவப்பட்ட பயம் கொண்ட, உண்மையான புகலிடக் கோரிக்கையாளர்களுக்கு (மற்றும் அவர்களது குடும்ப உறுப்பினர்களுக்கு) Protection visas உரியது.**

Protection visa என்பது ஆஸ்திரேலியாவில் நீண்ட காலம் தங்கி வேலை செய்ய விரும்புபவர்களுக்கானது அல்ல.

சமூக ஊடகங்கள் மற்றும் இணையவழி அரட்டை குழுக்களில் தங்கள் சேவைகளை ஊக்குவிக்கும் பதிவு செய்யப்படாத குடிவரவு ஆலோசகர்கள், ஆஸ்திரேலியாவில் வேலை செய்ய அல்லது இருப்பை நீட்டிக்க ஒரு வழியாக Protection visa வைப் பயன்படுத்துமாறு கூறுகிறார்கள்

இந்த ஆலோசகர்கள், Protection visa இற்கு விண்ணப்பிக்கும் போது தவறான அல்லது தவறாக வழிநடத்தும் தகவல் மற்றும் தவறான ஆவணங்களை வழங்குமாறு விண்ணப்பதாரர்களிடம் கூறலாம். இந்த தவறான ஆலோசனைக்காக சிலர் ஆயிரக்கணக்கான டாலர்களை அறவிடுகிறார்கள்.

ஆஸ்திரேலியாவில், பதிவு செய்யப்பட்ட குடிவரவு முகவர் அல்லது ஆஸ்திரேலிய சட்ட நிபுணராகவோ இல்லாவிட்டால், குடிவரவு ஆலோசனைக்கு ஒருவர் கட்டணம் அறவிடுவது சட்டத்திற்கு எதிரானது.

தவறான அல்லது தவறாக வழிநடத்தும் தகவலைப் பயன்படுத்தி Protection visa இற்கு விண்ணப்பிக்கும்படி தற்காலிக விசா வைத்திருப்பவர்களிடம் கூறுவதன் மூலம் சில வேலை வழங்குநர்கள் ஆஸ்திரேலியாவில் வேலை வாய்ப்புகளை வழங்கலாம்.

தவறான அல்லது தவறாக வழிநடத்தும் தகவல்களுடன் Protection visa இற்கு விண்ணப்பிப்பதன் மூலம் ஆஸ்திரேலியாவில் நீண்ட காலம் தங்கி வேலை செய்ய முடியும் என்றும் மாணவர்களுக்கும் கூறப்படுகிறது.





# தவறான தகவலின் ஆபத்துகள்

**செயலாக்க நேரத்தை விரைவுபடுத்த** Protection visa **அமைப்பில் பெரிய மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன. அதாவது ஆஸ்திரேலியாவில் வேலை செய்ய அல்லது இருப்பை நீட்டிக்க வேண்டுமென்று** Protection visa **இற்கு விண்ணப்பிப்பவர்கள் விரைவில் மறுக்கப்படுவார்கள்.**

அண்மைய ஆண்டுகளுடன் ஒப்பிடுகையில், பெரும்பாலான புதிய Protection visa விண்ணப்பங்கள் இப்போது கிட்டத்தட்ட **8 மடங்கு வேகமாக** முடிவு செய்யப்படுகின்றன. தவறான அல்லது தவறாக வழிகாட்டும் தகவல்களுடன் Protection visa விண்ணப்பத்தை சமர்ப்பிக்கும் நபர்கள் பாரிய அபராதம் மற்றும் சாத்தியமான சிறைத்தண்டனை உட்பட கடுமையான விளைவுகளை எதிர்கொள்கின்றனர்.

மறுக்கப்பட்ட Protection visa விண்ணப்பம் ஒரு நபரின் குடிவரவுப் பதிவில் இருக்கும். விருந்தினர், மாணவர் அல்லது தற்காலிக வேலை விசாவில் கூட, விண்ணப்பதாரர் மற்றும் அவர்களது குடும்பத்தினர் ஆஸ்திரேலியாவுக்கு திரும்புவது கடினமாக இருக்கலாம்.

விண்ணப்பதாரர் விண்ணப்பிக்கும் விசா வகையைப் பொறுத்து, எதிர்காலத்தில் உலகம் முழுவதும் உள்ள பிற நாடுகளுக்கான விசா விண்ணப்பங்களையும் இது பாதிக்கலாம்.

மறுக்கப்பட்ட Protection visa விண்ணப்பதாரர்கள் மற்ற விசாக்களுக்கு விண்ணப்பிக்க முடியாது மேலும் ஆஸ்திரேலியாவை விட்டு வெளியேற வேண்டும். அவர்களிடம் செல்லுபடியாகும் விசா இல்லை என்றால் அவர்கள் Australian Border Force (ஆஸ்திரேலிய எல்லைப் படை) ஆல் தடுத்து வைக்கப்பட்டு அகற்றப்படலாம். விண்ணப்பதாரர் தம்மை அகற்றுவதற்கான செலவையும் திரும்பச் செலுத்த வேண்டியிருக்கும், இது ஆயிரக்கணக்கான டாலர்களாக இருக்கலாம்.

இந்த ஆண்டு, Australian Border Force, தற்காலிக விசா காலாவதியான மறுக்கப்பட்ட Protection visa விண்ணப்பதாரர்களைத் தடுத்து வைப்பதில் கவனம் செலுத்துவதற்கும், அவர்களை ஆஸ்திரேலியாவிலிருந்து அகற்றுவதற்கும் ஒரு புதிய நடவடிக்கையைத் தொடங்கியது. இந்த நடவடிக்கை தொடர்ந்து நடைபெற்று வருகிறது

# உங்களால் எவ்வாறு உதவ முடியும்

**வெற்றிகரமான Protection visa விண்ணப்பங்களை விட குறிப்பிடத்தக்க அளவு தோல்வியுற்ற பாதுகாப்பு விசா விண்ணப்பங்களே அதிகம் உள்ளன, மேலும் இந்திய விண்ணப்பதாரர்களே தற்போது உச்ச மறுப்பு வீதங்களில் ஒன்றைக் கொண்டுள்ளார்கள்.**

மேலும் இந்திய நாட்டவர்களிடம் இருந்து பெறப்படும் Protection visa விண்ணப்பங்களே தற்போது உச்ச மறுப்பு வீதங்களில் ஒன்றைக் கொண்டுள்ளது. 2023-24 இல் பூர்த்தி செய்யப்பட்ட இந்திய விண்ணப்பங்களில் 97% தேவைகளைப் பூர்த்தி செய்யவில்லை மற்றும் மறுக்கப்பட்டன.

Protection visa இற்கு விண்ணப்பிப்பது பற்றி எண்ணுபவர்களுக்குத் தவறான தகவல் பரவுவதைத் தடுப்பதில், ஆஸ்திரேலியாவில் உள்ள சமூகங்கள் மற்றும் நிறுவனங்கள் முக்கிய பங்கு வகிக்கின்றன.

விசா விண்ணப்பத்தில் தவறான அல்லது தவறாக வழிநடத்தும் தகவல்களைச் சமர்ப்பிப்பதாலும், பதிவு செய்யப்படாத குடிவரவு ஆலோசகரைப் பயன்படுத்துவதாலும் ஏற்படும் அபாயங்கள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதும் இதில் அடங்கும்.

சாத்தியமான விண்ணப்பதாரர்களிடம், Protection visas உண்மையான புகலிடக் கோரிக்கையாளர்களுக்கானது என்று கூறுங்கள் - ஆஸ்திரேலியாவில் நீண்ட காலம் தங்கி வேலை செய்ய விரும்புபவர்களுக்கானது அல்ல.

Protection visa இற்கு விண்ணப்பிக்கும் ஒருவர், அவர்களுக்கான ஆதரவுக் கடிதத்தை எழுதச் சொன்னால், அவர்கள் உண்மையான புகலிடக் கோரிக்கையாளர் என்று நீங்கள் நம்பினால் மட்டுமே இதைச் செய்ய வேண்டும் - அவர்கள் குறிப்பிடத்தக்க தீங்கு விளைவிக்கும் ஆபத்தை எதிர்கொள்கின்றனர் அல்லது அல்லது அவர்கள் தாயகம் திரும்பினால் உண்மையாவே துன்புறுத்தலுக்கு அஞ்சுவார்கள் என்பதே இதன் பொருள்.

அவர்களின் மாநிலம் அல்லது ஆள்புலத்தில் உள்ள சிறப்பு அகதி மற்றும் குடிவரவு சட்ட வழங்குநரிடமிருந்து இலவச சட்ட ஆலோசனையைப் பெற அவர்களை ஊக்குவியுங்கள்.

# உங்களால் எவ்வாறு உதவ முடியும்

**Protection visa இற்கு விண்ணப்பிப்பது பற்றி எண்ணும் பலர், தாயகம் திரும்ப முடியாது என ஆஸ்திரேலியாவின் பாதுகாப்பைக் கோரிய பின், தமது தாயகம் சென்றால், அதனால் பின்விளைவுகள் ஏற்படக்கூடும் என்பது அவர்களுக்குத் தெரியாது அல்லது புரியவில்லை.**

சாத்தியமான Protection visa விண்ணப்பதாரர்கள் இதைப் புரிந்துகொள்கிறார்களா என்பதைச் சரிபார்க்கவும்:

- அவர்கள் ஒரு Protection visa ஐத் தாக்கல் செய்தால், அவர்கள் தாயகம் திரும்ப முடியாது என ஆஸ்திரேலியாவின் பாதுகாப்பைக் கோரிய பின், தமது நாட்டிற்குச் செல்ல முடியாது இருக்கலாம், அவர்களின் குடும்பம் அங்கு இருந்தாலும் கூட.
- அவர்களுக்கு Protection visa வழங்கப்பட்டால், அவர்கள் செல்ல முடியாதெனப் புகலிடம் கோரிய நாட்டிற்கு ஆஸ்திரேலிய அரசின் அனுமதியின்றி, அவர்களது குடும்பத்தினர் வசித்தாலும் செல்ல முடியாது.

அவர்களின் மாநிலம் அல்லது ஆள்புலத்தில் உள்ள சிறப்பு அகதிகள் மற்றும் குடிவரவு சட்ட வழங்குநர்களிடமிருந்து இலவச சட்ட ஆலோசனையைப் பெற, Protection visa இற்கு விண்ணப்பிக்கும் எவரையும் ஊக்குவிக்கவும்.

இந்த ஆலோசனை சாத்தியமான விண்ணப்பதாரர்கள் Protection visa இற்கு தகுதியுடையவர்களா என்பதைக் கண்டறியவும், விண்ணப்ப செயல்முறையை விளக்கவும், அவர்களின் Protection visa விண்ணப்பம் மறுக்கப்பட்டால் ஏற்படும் எதிர்மறையான விளைவுகளைப் புரிந்துகொள்ளவும் உதவும்.

# ஆஸ்திரேலிய அரசாங்கம் உங்கள் சமூகத்திற்கு எவ்வாறு உதவ முடியும்

**Protection visa இற்கு விண்ணப்பிக்கும் எவருடனும் பின்வரும் செய்திகளைப் பகிருமாறு உங்களை ஊக்குவிக்கிறோம்:**

1. மேலும் தகவல்களை அறிய ஆஸ்திரேலிய அரசாங்கத்தின் அதிகாரப்பூர்வ இணையதளத்தைப் பார்வையிடவும்.
2. உங்கள் மாநிலம் அல்லது ஆள்புலத்தில் உள்ள சிறப்பு அகதிகள் மற்றும் குடிவரவு சட்ட வழங்குநர்களிடமிருந்து இலவச சட்ட ஆலோசனையைப் பெறவும்.
3. குடிவரவு முகவர்கள் பதிவு அதிகாரசபை அலுவலகத்தில் பதிவுசெய்யப்பட்ட குடிவரவு முகவரைத் தேடிக்கண்டுபிடிப்பதன் மூலம் சரிபார்க்கவும்
4. உங்களையும் உங்கள் சமூகத்தையும் பாதுகாக்கவும். சட்டவிரோத குடிவரவு ஆலோசகர்கள் பற்றி பெயரடையாளம் குறிப்பிடாமல் Australia's Border Watch இற்குப் புகாரளிக்கவும்.
5. மாற்று விசா விருப்பத்தேர்வுகள் உங்களுக்குப் பொருத்தமானதா என்பதைக் கண்டறியவும்.

சுவரொட்டிகள், உண்மைத் தாள்கள், சமூக ஊடகப் பதிப்பிகள் மற்றும் பாதுகாப்பு விசாக்கள் பற்றி உங்கள் சமூகங்களுக்குத் தெரிவிக்க உதவும் பிற கருவிகளை உள்நாட்டு அலுவல்கள் திணைக்களம் தயாரித்துள்ளது.

அவற்றை இங்கே அணுகலாம்





# எதிர்மறையான சமூக ஊடகக் கருத்துகளுக்கு எவ்வாறு பதிலளிப்பது என்பது குறித்த ஆலோசனை

**சமூக ஊடக தளங்கள் மற்றும் குழுக்களில், ஆஸ்திரேலியா மற்றும் வெளிநாடுகளில் வசிக்கும் மக்களுக்கு** Protection visas **வழங்கப்படுவது குறித்து நிறையத் தவறான தகவல்கள் உள்ளன.**

இணையவழி மன்றங்கள் அல்லது குழுக்களில் Protection visas பற்றிய தவறான தகவல்கள் பகிரப்படுவதைக் கண்டால், தவறான தகவல் என்று அடையாளம் காணவும் அதிகாரப்பூர்வ இணைப்பு உட்பட இந்த ஆவணத்தில் பகிரப்பட்ட சரியான தகவலை விளம்பரப்படுத்தவும் உங்களுக்கு முக்கியமானதொரு வாய்ப்பு உள்ளது – homeaffairs.gov.au/protection

Protection visa விண்ணப்பத்தில் யாராவது தவறான அல்லது தவறாக வழிநடத்தும் தகவல்களைச் சமர்ப்பித்தால் அல்லது பதிவு செய்யப்படாத குடிவரவு ஆலோசகரைப் பயன்படுத்தினால் ஏற்படும் ஆபத்துகள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதன் மூலம் உங்களையும் உங்கள் சமூகத்தையும் பாதுகாக்கவும்.

மிக முக்கியமாக, சாத்தியமான விண்ணப்பதாரர்களை முதல் படியாக இலவச சட்ட ஆலோசனையை அணுக ஊக்குவிக்கவும்.



Australian Government

# உங்களுக்கு **நன்றி**

பங்குபற்றியமைக்கு

